நேற்று (25.06.2024) போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் 2024-2025 ஆம்ஆண்டிற்கான போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நேற்று (25.06.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் 2024-2025 ஆம்ஆண்டிற்கான சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நேற்று (25.06.2024) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 2024-2025 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நேற்று (25.06.2024) ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் 2024-2025 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

திருவண்ணாமலை

அண்ணாமலை கோவிலுக்கு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டுள்ளதா?

பேரவையில் கு.பிச்சாண்டி வினா!

சென்னை, ஜூன் 26 -

திருவண்ணாமலை, அண்ணாமலையார் கோயிலுக்கு 'மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டிருக்கிறது' - என்று சட்டப் பேரவையில் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி வினா எழுப்பினார்.

சட்டமன்றப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி எழுப்பிய வினா வருமாறு:-

கு.பிச்சாண்டி : எனது கீழ்ப் பெண்ணாத்தூர் தொகுதியிலே கருங்காலி குப்பம் பெருமாள் கோயில், அதேபோல கீழாத்தூர் கோயில், சொரங்குளத்தூர் கோயில் ஆகியவற்றில் பணிகள் பாதியளவே நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெறாமல் இருக்கிறது. அதை விரைந்து நடைபெறுவதற்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு மாஸ்டர் பிளான் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறதா, திருச்செந்தூர், பழனியை போல மிக அதிக அளவில் தெலுங்கானாவிலும், ஆந்திராவிலிருந்தும் பல லட்சக்கணக்கான மக்கள் தினசரி வருகை தந்து கொண்டிருக்கும் காரணத்தால் அதற்கான மாஸ்டர் பிளானை தயாரித்து வேண்டிய வசதிகளை பக்தர்களுக்கும், அங்கே ஊரில் இருக்கக்கூடியவர்கள் வீடுகளை கூட செல்ல முடியாத ஒரு சூழல் இருக்கின்றது ஆக அந்த முழுமை திட்டத்தை தயாரித்து திருவண்ணா மலை அண்ணாமலையார் கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கான வசதிகளை செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா, அதேபோல கோயில்களிலே செலுத்தப்பட்ட தங்க காணிக்கைகளை கட்டிகளாக உருவாக்கி வங்கிகளில் எந்தெந்த கோயிலுடைய தங்கங்கள் அப்படி டெபாசிட் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தொடர்ந்து அந்த பணிகளை நம்முடைய அறநிலையத்துறை செய்யுமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலை பொறுத்தளவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடி பார்வையில் அந்த மாவட்டத்தின் அமைச்சர் வேலு 10 நாட்களுக்கு ஒரு முறையாவது ஆய்வு கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார். அந்த வகையில் முதல் கட்ட மாஸ்டர் பிளான் என்பது சுமார் 36 கோடியே 41 லட்சம் ரூபாயில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அந்த திருக்கோயிலுக்கு ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்து பௌர்ணமி தினத்தில் சுமார் 30 லட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கின்ற நிலை உள்ளது. இதை கருத்தில் கொண்டு இரண்டாவது மாஸ்டர் பிளான் திட்டத்தில் பக்தர்களுக்கு தேவையான தங்கும் இடவசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும் என்ற மாவட்ட அமைச்சர் அவர்களின் கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, இந்து சமய அறநிலைத்துறை அறிவிப்பில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை துணைத்தலைவர் தங்க முதலீட்டு திட்டம் குறித்து கோரினார்கள். இந்த திட்டத்தை முதலில் கொண்டு வருகின்ற போது இந்த துறைக்கு ஏற்படுத்தாத அவமானங்களே இல்லை. அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து தங்க முதலீட்டு திட்டத்தில் 13 திருக்கோயில்களிலிருந்து பெறப்பட்ட 257 கோடியே 22 இலட்சத்து 36 ஆயிரத்து 910 ரூபாய் மதிப்பிலான 442 கிலோ 107 கிராம் 030 மில்லிகிராம் எடை கொண்ட தங்கக் கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கு ரூ. 5 கோடியே 79 இலட்சத்து 12 ஆயிரத்து 671 ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது. இந்த வட்டித் தொகை அந்தந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், பக்தர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற பணிக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளித்தார்.

விளாத்திகுளம் தொகுதிக்கு ஊற்றுத் தண்ணீர் தரும்

வைப்பாற்றில் மூன்று அணைகள் கட்ட வேண்டும்!

சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 26 -

சட்டப்பேரவையில் கடந்த 21 ஆம் தேதி -வெள்ளிக்கிழமை அன்று, மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய விளாத்திகுளம் தொகுதி கழக உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், "விளாத்திகுளம் தொகுதிக்கு ஊறறுத் தண்ணீர் தருகிற வைப்பாற்றில் மூன்று அணைகள் கட்ட வேண்டும்!" என வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது :-

ஜி.வி.மார்க்கண்டேயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்வளத் துறை, இயற்கை வளங்கள் துறை, தொழிலாளர் நலத் துறை தொடர்பான மானியக் கோரிக்கையில் எனக்கு பேசுவதற்கான இந்த அரிய வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய கொறடா அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அவையில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், பார்வையாளர்கள், துறை சார்ந்த அலுவலகப் பெருமக்களுக்கும் என்னுடைய காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகப்பெரிய ஒரு துறை. இந்தத் துறையில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தப் பகுதி மக்களுக்காக, இந்த நாட்டிற்காக, நம் மக்களினுடைய வாழ்வாதாரத்திற்காக, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைப்பது என்பது மிக அவசியமான, அத்தியாவசியமான ஒன்று. இந்த நெடிய பயணத்தில் ஐந்து நிமிடத்திற்குள் இதை கடந்து விட வேண்டுமென்று சொல்கிற போது, நேரம் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினால், இதை நீங்கள் நிர்பந்தம் செய்வது என்பது ஒரு வருத்தமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும்கூட, பேரவைத் துணைத் தலைவராகிய நீங்கள் கொடுத்துள்ள இந்த நேரத்தில் எங்களுடைய கருத்துக்களைப் பதிய வைக்க விரும்புகிறேன். நீர்ப்பாசனத் துறையினுடைய அமைச்சர், இந்த சட்டமன்ற வரலாற்றில் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் மிகப் பெரிய ஒரு அனுபவத்தைப் பெற்றவர்.

இவ்வளவு பெரிய அனுபவம் பெற்ற ஒரு அமைச்சர் அவர்கள், தமிழகத்தினுடைய இரண்டு துறைகளை தன்னுடைய கரங்களில் வைத்திருக்கிறார். ஒன்று, இயற்கை வளங்கள் துறை. மற்றொன்று, நீர்வளத் துறை. 'நீரின்று அமையாது உலகு' என்ற வள்ளுவனுடைய வார்த்தைகளை, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.இராஜா தொட்டுக் காண்பித்து, தொடங்கி வைத்தார்கள். எந்த நீர் ஒரு மனிதனுக்கு உணவாக, உயிராகப் பயன்படுகிறதோ, அந்த நீர் தான் அந்த மனிதகுலத்தை அழித்ததாகவும் வரலாறு சொல்கிறது. ஒரு கண்டமே மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. வனத் துறை, சுற்றுச்சூழல் துறை, காலநிலை மாற்றத் துறை ஆகியவையெல்லாம் இணைந்து, எங்கள் மக்களுடைய வாழ்வாதாரத்தை எப்படிக் காப்பது என்று சிந்தித்துக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில், கனிமொழி கருணாநிதி அவர்கள், தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராக தேர்தல் களத்திலே நிறுத்தப்பட்டபோது, சமூக நலத் துறை அமைச்சர் , மீன்வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால் நடை பராமரிப்புத் துறை அமைச்சர், ஒட்டப்பிடாரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா, ஸ்ரீவைகுண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ், விளாத்திகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகிய நான் என நாங்கள் அனைவரும் மிகக் கடுமையான வெள்ளநீர் பாதிப்பிற்குள்ளாகியிருந்தோம். எந்த மழைநீர் மக்களுக்கு,

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூஉ மழை'

என்று வள்ளுவம் சொன்னதோ, அந்த மழை எங்களை 2 மாத காலமாக நிம்மதியை இழக்க வைத்தது. தாமிரபரணியிலிருந்து வரக்கூடிய தண்ணீர், ஏறக்குறைய அந்த ஆற்றில் தொடர்ந்து ஒரு வாரமாக 3 இலட்சம் cubic metersக்கு மேலாக தண்ணீர் வந்து, அங்கிருக்கக்கூடிய குளங்களை யெல்லாம் உடைத்து, மாவட்டத்தினுடைய ஒரு பகுதியையே சிதைத்துவிட்டது.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், எங்களுடைய முதல்வர் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோரெல்லாம் உடனடியாக வந்து, கண்ணீர்க் கடலிலே தத்தளித்துக் கொண்டிருந்த அந்த மக்களைப் பார்த்தார்கள். வீடில்லாதவர்களுக்கு வீடு, உணவில்லாதவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. எத்தனையோ சாலைகள் உடைந்து போயின. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் ஒன்றியத்திற்கு, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் ஒன்றியத்திற்கு என பொறுப்பேற்று கவனித்தனர்.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், உணவுத் துறை அமைச்சர் அவர்களும் கொடுத்த பொட்டலங்களை எங்கள் மக்கள் மறந்து விட மாட்டார்கள். நாங்கள் நினைத்துக் கொண்டேயிருக்கிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால், அவர்களெல்லாம் செய்த பணி. 'வெள்ளம் வருமுன்னே அணை போட வேண்டும்'. அதாவது, 'Prevention is better than cure' என்கிற பழமொழி நம்முடைய நீர் வளத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இருந்ததில்லை. ஆனால், பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. நூறாண்டுகளுக்கு மேலாக இதுவரை பொழிந்திராத மழை பொழிந்துவிட்டது. அங்குள்ள மக்கள் மிகப் பெரிய சிரமத்திற்கு ஆளானார்கள். அந்த மாவட்டமே சிதைந்து போனது.

அனைத்து வீடுகளிலும் உணவு இல்லை; கல்லூரியில் படித்து முடித்துவிட்டு வேலைக்குப் போக வேண்டுமென்றால், certificates இல்லை; குடும்ப அட்டை இல்லை; ஆதார் அட்டை இல்லை; எதுவுமே இல்லாமல் அனைத்தும் மூழ்கிப் போய்விட்டன. அதற்குப் பிறகும்கூட, தேர்தலில் திருமதி கனிமொழி அவர்களை எதிர்த்து நின்றவர்கள் அத்தனைபேரும் காப்புத் தொகையை இழந்திருக்கிறார்கள்; அத்தனை வேட்பாளர்களும் காப்புத் தொகையை இழந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இது ஜோசப் ஸ்டாலினுக்கு நிகரான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற ஒப்பாரும் மிக்காரு மில்லாத முதல்வர் அவர்களின் தலைமையில் இயங்கும் அரசு, உடைந்துபோன குளங்கள், சாலைகள், இடிந்த பள்ளிகள் என அனைத்தையும் சீரமைத்து, அனைத்து மக்களுடைய வாழ்வாதாரத்தையும் நிறைவு செய்திருக்கிறது. அந்த 40/40 என்று வெற்றி பெற்றதே எங்களது ஆட்சியினுடைய சாட்சி என்பதை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தபோதுதான், கள்ளக்குறிச்சி சம்பவம் நடைபெற்றது.

வெள்ளமும், மழையும், வானிலை மாற்றமும், காலநிலை மாற்றமும், கணிக்க முடியாத அறிவியலும் அழித்து விட்ட தூத்துக்குடியையே இந்த திராவிட மாடல் ஆட்சி காப்பாற்றியது என்று சொன்னால், கள்ளக்குறிச்சி சம்பவம் மானிடனால் ஏற்பட்டது. இரும்புக் கரம் மட்டுமல்ல; இந்தியாவில் எவராலும் செய்ய முடியாததை இந்த ஸ்டாலின் அவர்களின் அரசு செய்யும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை, இந்த மக்களைக் காப்பார் என்பதிலும் என்று உறுதிபட நான் எடுத்து வைக்கிறேன்.

வைப்பாற்றில் அணை!

நீர்வளத் துறை அமைச்சர் அவர்களே, தங்களது நீர்வளத் துறையின் 309 பக்கங்கள் அடங்கிய கொள்கை விளக்கக் குறிப்பினை நான் பார்த்தேன். பாலாறு, தாமிரபரணி, காவேரி என அனைத்து நதிகளைப் பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாண்டுகாலமாக தங்களிடம் ஒரு கோரிக்கையை வைத்து வருகிறேன்.

perennial riverகளைப் பற்றி அதிகமாக நீங்கள் concentrate செய்கிறீர்கள். Rainfed எப்போதாவது மழை வந்தால்தான் அந்த ஆற்றில் கை வைத்தால் தான் எங்களுக்கு ஊற்றுத் தண்ணீர் கிடைக்கும். அந்த ஊற்றுத் தண்ணீர் கிடைக்கிற வைப்பாற்றில் 3 அணைகளைக் கட்ட வேண்டும். 30 கோடி ரூபாய் இருந்தால் போதும். எங்களுக்கு நிறைவுதரும் என்று உங்களிடம் மனு கொடுத்திருக்கிறேன். 309 ஆவது பக்கத்திற்குப்பிறகு தொடர்ந்து ஒவ்வொரு பக்கமாக நீர் நிரம்பியிருக்கக்கூடிய அணைகளைப் பார்த்தேன். அடுத்தமுறை மானியக் கோரிக்கையில் வைப்பாற்றில் 3 அணைகளும் கட்டப்பட்டது என்ற அந்தப் படத்தை நான் பார்த்தால், என் வாழ்நாள் முழுவதும் நான் உங்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன் என்பதைச் சொல்லி இன்னும் இரண்டு நிமிடம் எனக்கு பாக்கி இருக்கிறது.

என்னுடைய நேரத்தில்,

"ஆணிகள் செய்வோம்,

கோணிகள் செய்வோம்,

ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்,

அணு ஆயுதம் செய்வோம்"

இந்த நாட்டினுடைய மலைகளைக் குடைந்து, நிலங்களைக் குடைந்து, கனிம வளங்களை எடுத்து இந்த நாட்டை முன்னேற்றுவோம் என்று சொன்னானே இந்த முண்டாசுக் கவிஞன். நான் கனிம வளங்கள் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்கிறேன். எந்தக் கனிமத்தை எடுத்தாலும் சரி, ஊதாரித்தனமாகவும், சரியாக மதிப்பீடுகள் இல்லாமலும், போலியாகவும், இந்த நாட்டையும், இந்த அரசையும், தொழில் செய்கிறவர்களையும் இதைச் செய்கிறார்கள், அதைச் செய்கிறார்கள் என்று ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களை.

ஜி.வி. மார்க்கண்டேயன்: இரும்புக் கரம் கொண்டு அடக்கி, கனிம வளங்களை வைத்து, இந்த தேசியத்தை ஆள்வதில் தமிழகம் முதன்மையான இடத்தைப் பெற்றது என்று அனைத்துக் கனிம வளங்களையும், நீங்கள் முதன்மையாகக் கையாண்டு வெற்றிகரமான ஒரு தமிழகத்தை உருவாக்க வேண்டும். நேரம் குறைவாக இருக்கிறது. தொழிலாளர்கள் இந்த நாட்டிலே,

"கீர்த்திகொள் போகப் பொருட்பு வியே! உன்றன்

கீழிருக்கும் கடைக்கால் எங்கள்

சீர்த்தொழிலாளர் உழைத்த உடம்பில்

சிதைந்த நரம்புகள் தோல்!"

அமைச்சர் அவர்களே, அந்த நரம்புகளையும், தோல்களையும் இந்த நாட்டுக்காகக் கொடுத்திருக்கிற தொழிலாளர்களினுடைய வாழ்க்கையை நீங்கள் உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்று உங்களையும் கேட்டு, வாய்ப்பு நல்கிய உங்களுக்கு என்னுடைய மனநிறைவான நன்றியைச் சொல்லி, என் விளாத்திகுளம் தொகுதி மக்கள் 3 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் மழை இல்லாத Rainfed பகுதியிலே உள்ளவர்கள் அவர்களுக்கு மழையாக, துரைமுருகன் அய்யா அவர்கள் அருள் கொடுக்க வேண்டும் என்று கேட்டு நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு ஜி.வி. மார்க்கண்டேயன் பேசினார்.

குடகனாறு அணைத் தண்ணீரை வேடசந்தூர் மக்கள் எடுத்துக்கொள்ள அனுமதி தருக!

பழனி - பச்சையாறு திட்டத்திற்கான அணையைக் கட்டித் தாரீர்!

சட்டப்பேரவையில் வேடசந்தூர் கழக உறுப்பினர் எஸ்.காந்திராஜன் கோரிக்கை!

சென்னை, ஜூன் 26-

சட்டப்பேரவையில் நீர்வளம் மற்றும் இயற்கை வளங்கள் ஆகிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கழக உறுப்பினர் வேடசந்தூர் எஸ்.காந்திராஜன், "குடகனாறு அணைத் தண்ணீரை வேடச்சந்தூர் மக்கள் பயன்படுத்திக்கொள்ள அனுமதி தாரீர்!" என்றும், "பழனி - பச்சையாறு திட்டத்திற்கான அணையைக் கட்டித்தர வேண்டும்!" என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-



பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப் போல, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்போது நடைபெற்ற முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், போட்டியிட்ட அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றியை பெற்று, இந்திய அரசியலில் ஓர் இமயமாய் விளங்குகின்ற தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கு, நம்முடைய தமிழ்நாடு மக்கள் கொடுத்திருக்கின்ற மூன்றாண்டு கால ஆட்சிக்கான அங்கீகாரம்தான் இந்த வெற்றி என்பதை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். அந்த வெற்றிக்குப் பின்னால் உள்ள, கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஒரு செங்கல்லை மட்டுமே வைத்து வெற்றியை பெற்றவரும், நாடாளுமன்றத் தேர்தலில் NEET அடிப்படையில் ஒரு முட்டையை மட்டும் காண்பித்து வெற்றியை பெற்றவருமான தி.மு.க. இளைஞரணித் தலைவரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான இளவல் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வெற்றிக்காகப் பாடுபட்ட அமைச்சர் பெருமக்களும், சக சட்டமன்ற உறுப்பினர்களும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் குறிப்பாக நீர்வளத் துறை மானியக் கோரிக்கையை தேர்வு செய்ததற்கான காரணம், என்னுடைய வேடசந்தூர் தொகுதி என்பது மிகுந்த வறட்சியான பகுதி. கடந்த காலத்தில் வரலாறு காணாத நிகழ்வாக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அறிவித்திருக்கின்ற அரசு, பல்வேறு அரசுகள்; எனவே, அதன் அடிப்படையில் என்னுடைய கோரிக்கைகளை வைப்பதன் மூலமாக என்னுடைய தொகுதிக்கு வேண்டிய அத்தனை காரியங்களையும் செய்து கொள்ள முடியும் என்கிற அடிப்படையில் நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கைகளை வைப்பது மட்டுமல்ல, அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவும் விரும்பு கின்றேன்.

குறிப்பாக, வருடந்தோறும் வேடசந்தூர் பகுதியில் மழையளவு குறைந்துகொண்டே வருகின்றது. ஏராளமான வறட்சி பகுதியாக, எத்தனை திட்டங்களை கொண்டு வந்தாலும் கூட, அங்கிருக்கின்ற மக்கள் பிழைப்புத் தேடி மற்ற அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களுக்கு குடிபெயர்ந்து வருகிறார்கள். பல்வேறு கிராமங்களில் ஆட்களே இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்ற நிலையை நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். எனவே, அந்தப் பகுதியிலே நிலத்தடி நீர் மட்டம் என்பது கிட்டத்தட்ட 1,000 அடிக்கு கீழே சென்றுவிட்டது.

அதனுடைய அடிப்படையில் நான் ஏற்கெனவே 199196 ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, ஒன்றிய அரசினுடைய நீர்வளத் துறை NGRI என்று சொல்லப்படுகின்ற National Geophysics Research Institute, Hyderabad என்ற ஒன்றிய அரசினுடைய நிறுவனத்தினுடைய உதவியை நாடி, அவர்களை ஆராய்ச்சி செய்து, அதன்மூலம் அவர்களுடைய திட்ட அறிக்கையை தருமாறு தனிப்பட்ட முறையில் நான் வேண்டினேன்.

அன்றைய தினம் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவராக இருந்த பிச்சாண்டி அவர்கள் எனக்கு உறுதுணையாக இருந்து, அதேபோல் வெளி நாட்டிலிருந்து, ஜெர்மனியிலிருந்து வந்திருக்கின்ற Scientist. வல்லுநர்களெல்லாம் சேர்ந்து கொடுத்த ஓர் ஆய்வின் அடிப்படையில் வேடசந்தூர் தொகுதி முழுவதும் over exploited என்ற நிலையை அடைந்துவிட்டது. தண்ணீரே இல்லாத வறண்ட சூழ்நிலை காணப்படுகிறது. இதனை Red Zone ஆக அறிவிக்கப்படலாம் என்று சொல்லி, அவர்கள் ஓர் அறிக்கையைக் கொடுத்தது மட்டுமல்ல, மழையே இனி மேல் இல்லை. இனிமேல் மழை வர வேண்டுமென்று சொன்னால், Ground Water Rechargeக்கும் எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. என்று ஓர் அறிக்கையினை கொடுத்தார்கள். அதனுடைய அடிப்படையில்தான் மீண்டும் நான் சட்டமன்ற உறுப்பினராக 2021 ஆண்டு அறிவிக்கப்பட்ட நிலையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோது, வடமதுரையில் அவர்களிடத்தில் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், முதலமைச்சர் அவர்கள் அன்றைய பொதுக் கூட்டத்திலேயே அறிவித்தார்கள். காவிரி ஆற்றினுடைய உபரி நீரைக் கொண்டு கிட்டத்தட்ட வேடசந்தூர் தொகுதியிலுள்ள 405 பொதுப் பணித் துறை மற்றும் உள்ளாட்சித் துறையினுடைய குளங்களுக்கு தண்ணீரை நிரப்புகின்ற திட்டத்தை எங்களுடைய ஆட்சி வந்தவுடன் நிறைவேற்றித் தரப்படும் என்ற அந்த வாக்குறுதியைத் தந்தார்கள்.

எனவே, இந்த வகையில் மாற்று ஏற்பாடு செய்யப்படும் என்ற அடிப்படையில்தான் அதனை அறிவித்தது மட்டுமல்ல, ஆட்சிக்கு வந்தவுடனேயே அதற்காக நிதி யொதுக்கீடு ரூ.10 இலட்சத்தை ஒதுக்கீடு செய்தார்கள். மற்ற திட்டங்களையெல்லாம் investigation செய்வதற்காக ஒரு teamஐயே அறிவித்தார்கள். இன்றைய சூழ்நிலையில் அது பல்வேறு காலக்கட்டங்களை கடந்து, 3 ஆண்டுகளுக்கு பின்னால், இன்று மதுரையினுடைய E.E.. நீர்வளத் துறை அவர்களால் இந்தத் திட்டம் பரிந்துரை செய்யப்பட்டு, C.E.. சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இப்போது கடந்த 2023 2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நம்முடைய நீர் வளத் துறை அமைச்சர் அவர்கள் வேறொரு திட்டத்திற்காக 97.6 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, புதிய ஒரு investigationக்காக அந்தப் பணத்தை ஒதுக்கியிருக்கின்றார்கள்.

தண்ணீர் பிரச்சினை

கரூர், திண்டுக்கல், இந்த இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து மொத்தம் திண்டுக்கல், ஆத்தூர், ஒட்டன்சத்திரம், அதேபோல் நத்தம், வேடசந்தூர் மற்றும் கரூர் மாவட்டத்திலிருக்கக்கூடிய கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி மற்றும் கரூர் என 7 தொகுதிகளுக்கும் சேர்த்து இந்தத் திட்டத்திற்காக ஆய்வு செய்வதற்காக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். ஏற்கெனவே வேடசந்தூருக்கு அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டமானது Final stageல் ஒரு முடிவான நிலையில் இருக்கின்றபோது, இரண்டாம் கட்டமாக First phase, Second phase என்று இரண்டாவது திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள்.

இந்த இரண்டாவது திட்டம் நல்ல திட்டம்தான்; இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும்கூட வேடசந்தூர் தொகுதிக்கு ஏற்கெனவே 2021 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்தை தொடர்ந்தால், எதிர்க்காலத்தில் நீர் வளம், நீரினை பங்கிடுவதில் பிரச்சினைகள் இருக்காது. ஏனென்று சொன்னால் குழாய்கள் மூலமாக பம்பு செய்து, காவிரி ஆற்றினுடைய உபரி நீரை இந்த 7 தொகுதிகளுக்கும் கொடுக்கின்றபோது, தண்ணீர் பங்கீட்டில் பிரச்சினை வரும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. எனவே, 2021 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொடங்கப்பட்ட அந்தத் திட்டம் தொடரட்டும் என்பதை எனது வேண்டுகோளாக வைத்துக்கொள்ள விரும்புகின்றேன். மற்றும் கடந்த ஆண்டில் வரவு செலவில் அறிவிக்கப்பட்ட Phase 1. Phase 2 என்ற இரண்டு திட்டங்களையும் நடைமுறைப்படுத்தலாம்.

இருந்தாலும்கூட, இந்தத் திட்டங்கள் மூலமாக எங்களுக்கு கிடைக்கின்ற பயன் என்பது குறைவாக இருக்கும் என்று சொல்லி, அதேபோல மற்ற மாநிலங்களுக்கு செல்லுகின்ற நிலைமையை மாற்றுவதற்கு இந்த நீர்வழித் திட்டம் வந்தால் மட்டுமே, எங்களுக்கு சரியாக இருக்கும் என்கிற அந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்களிடத்திலே வலியுறுத்தி இந்தத் திட்டம் விரைவிலே நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை வேண்டுமென்று சொன்னாலும்கூட, அதை அவசியம் செய்து தரவேண்டும். ஏனென்று சொன்னால், பக்கத்து மாநிலமான கர்நாடகாவிலும், ஆந்திராவிலும் இதே போன்ற பல்வேறு திட்டங்கள் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவிலே செய்யப்பட்டு அந்த Upper Bhadra, Shimoga என்கிற அந்த ஹேமாவதி நதியிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்ற நீரின் மூலமாக சுமார் ஐந்து இலட்சம் hectares நிலம் அங்கே வளமான பகுதிய